Mr. DEPUTY SPEAKER : I am not going to allow the hon. Member to speak. I do not like to encourage argument.

THIRU G. R. EDMUND : I am on a point of self-explanation.

Mr. DEPUTY SPEAKER : There is no question of argument. When the Chair is not allowing you, you cannot speak. You kindly resume your seat. Let me speak. Then you can make a request.

THIRU G.R. EDMUND : On a point of self-explanation.

Mr. DEPUTY SPEAKER : I have already given you an opportunity. You have misused that opportunity.

THIRU G. R. EDMUND : Every member has got a right........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எட்மண்ட் நீங்கள் உட்காருங்கள். இங்கே எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினையில் பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஒழுங்குப் பிரச்சினையில் பேசினாலும் சரி, விவாதத்தில் பேசினாலும் சரி, எதிர்வரிசையில் இருப்பவர்கள் தங்களுடைய விவாதத்தில் பேசுகிறபொழுது மற்றவர்களை ஒரு கோதாவில், சண்டைக்கு இழுக்க வேண்டுமென்று பேசுவது சரியல்ல. நேற்றைய தினம் உள்ளபடியே முன்னாள் பேரவைத் தலைவர் திரு. மதியழகன் அவர்களிடம்—அவர்கள் வருவதற்கு முன்னாலேயே—இந்தப் பேரவைக்கு வருவதற்குத் தடையில்லை என்று சொல்லியிருந்தேன். நான் அவர்களை வரவேற்கிறேன் என்று கூடச் சொல்லியிருந்தேன். என்னுடைய துரதிருஷ்டமோ என்னவோ நாள் தவறாமல் புதுப்புதுப் பிரச்சினைகள் இந்தச் சட்டமன்றத்தில் உருவாகின்றன.

நண்பர் வீராசாமி அவர்கள் புதுமாதிரியாக ஒரு பிரச்னையை எழுப்பி இருக்கிறார். பேரவை செத்து விட்டது என்று சொன்னவர் கடிதம் எழுதலாமா என்று கேட்டார். அது குறித்து ஏற்கனவே பேரவையில் விவாதித்து இருக்கிறோம். பேரவை செத்து விட்டது என்று அவர் சொல்லியிருக்கலாம். கடிதம் எழுதத் தடையில்லை. எனக்கு எழுத சக்லே. நான் பிழைக்கவில்லை என்று அவர் கருதியிருந்தாலும் இருக்கக் கூடும். அதற்குக் கூட நான் மெடிகல் சர்டிபிகேட் அனுப்பவேண்டுமோ என்னவோ தெரியவில்லை. கோபத்தில் அவர் பேரவை செத்து விட்டது என்று சொல்லியிருக்கலாம். இன்றைய தினம் கோபம் தணிந்து, அவருடைய கட்சியின் செயலாளரிடமிருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது.

திரு. எட்மண்ட் அவர்கள் என் இன்னும் இடம் ஒதுக்கவில்லை என்று கேட்டு இருக்கிறார்கள். நேற்றை தினம் கடிதம் எழுதியிருக்கிறார்கள். திரு. மதியழகன் அவர்கள் எங்கள் கட்சியில் சேர்ந்திருக்கிறார். எங்கள் பிளாக்கில் இடம் ஒதுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே எட்மண்ட் அவர்களைக் கலந்துகொண்டு, உங்கள்